


# பேசும் இயற்கை



--- ஜெயசேகரன் ஜென்

தொகுப்பு: அனுத்தமா




*பேசும் இயற்கை: 001*

*அதிர்வதில்லை நான்*
*ஆர்வத்தில்*
*ஆர்ப்பரிப்பதில்லை*
*உளம் மகிழ உன்*
*காரணம் நான் எனினும்*
*கர்வமில்லை*

*பொறாமையில்லை*
*பெருமையில்லை*
*நகரும் உனக்கு*
*சாட்சி நான் என்ற*
*நரம்பு திமிர் இல்லை ...*

*இவ்வளவு இல்லையும்*
*உன்னிடமும் இல்லை*
*என்ற பின்னே நீ*
*என் முன்*
*நிற்கிறாய்*
*வியக்கிறாய்*

*நீ இங்கு வருவாய்*
*தெரிந்தும் என் குரலில்*
*அகங்காரமில்லை*
*வா.. உன்னை அப்படியே*
*ஏற்றுக்கொள்கிறேன்.*




*பேசும் இயற்கை 002 :*

*எழும்பி இருக்கும் கற்கள்
மனிதனின் மனசாட்சியாய்
இருக்கும் பட்சத்தில்
இந்த கோபுரம் சரியே*

*எங்கும் நீக்கமற
நிறைந்திருக்கும் நீ
ஒரு எல்லைக்குள் இங்கு
அடைபட்டிருப்பதன் நோக்கம் என்ன ?*

*என்னுடன் பயணிக்கும்போது
என் பகுதியாக மாறும் நீ
இங்கு ஒரு உருவமாய்
ஏன் தனித்து போனாய் ?*

*நீ இருப்பதாக நினைப்பதால்
இன்னும் சில மனிதங்கள்
பயத்துடன் வாழ்வதை பார்க்கும்போது
நீ இருப்பதும் சரியே எனத் தோன்றுகிறது.*




பேசும் இயற்கை: 003

முகப்பூச்சு பூசா
செயற்கை உணவு உண்ணா
பொருந்தா செயற்கை உடை அணியா
என் காதலர்களை கவனி...

பெய்த மழையில்
தங்களை புதுப்பித்து
மிச்ச சாரலை தூது விடும்
மென்காதல் ...

காற்றினை காரணமாக்கி
காதலியின் இடை வருடும்
கள்ளமற்ற காட்சி பின்னலில்
கண மெய் மறந்து ஆடும் நேர்மை...

அருகில் இருந்தும்
அளவு இடைவெளியில்
ஒன்றை இன்னொன்று ரசிக்கும்
இள காம்பு மனநிலை...

வேரின் நீரையும்
சூரியனின் ஒளியையும்
தண்டுகளின் உதவியையும்
செய் நன்றி மறக்கா மாண்பு ... என் காதலர்களிடம்
கற்றுக்கொள்ளுங்கள்.




பேசும் இயற்கை : 004

எங்கும் நான்
என் பகுதிகளாய்
எல்லையற்று இருக்கிறேன்
ஓர் பாதை என்னை காண உதவாது

நீ ஏற்படுத்திய
வாய்க்கால் வரப்பு
சாலை எல்லை எல்லாம்
உன் குறு மன நிலைக்கானவை

நாடு மாநிலம்
மாவட்டம் வட்டம்
என எனக்குள் நீ ஏற்படுத்தும்
சாதி முயற்சிகள் தோற்றே போகும்

நிரந்தர நான் வெல்வேன்
அற்ற நீ வீழ்வாய்
என்னை கோடுகளாய் கிழிக்கும்
உன் கீழ் மனதில் இருந்து
நான் வெளியேறி நீண்ட காலம் ஆகிறது.

இக்காட்சிகள் சிறு உதாரணங்களே...
அறிவாயா ?




பேசும் இயற்கை : 005

மேகம் மண் கலந்து
மாசற்ற நகர்வாய்
உன்னிடம் பேச வரும்
உன் ஆதாரம்

சூழ்நிலைகள்
எதுவெனினும்
முன்னேறுவது மட்டுமே
தெரிந்த ஆளுமை

நீ படித்த
மொத்த படிப்பும்
நீரை சேமியுங்கள்
என்று சொல்லவே

செல்லும் வழியெல்லாம்
வேருக்கு தன்னை
வழங்கும் தொல்காப்பிய
அழகு

நீயல்லா கிரகங்கள்
வெறும்
வான் பொம்மைகள்
நீயிருக்கும் பூமி
உயிர் உயில் அறிவோம் மானிடா.




பேசும் இயற்க்கை : 006

உள்ளதை உள்ளபடி
வெளியில் பிரதிபலித்து
நிலைத்தன்மையில் வாழும்
நீர்நிலைக் குழந்தைகள் என்னுடையவை

உன் விருப்ப அசிங்கத்தை
பேச்சினில் க் சேர்த்து
உள்ளதை இல்லாததாக மாற்றும்
எண்ண கிறுக்கன் நீ

எண்ண கிண்ணத்தில்
விஷம் கலக்கா
வாழ்வு உன்னுடையதாகில்
நீதிமன்றங்கள்
தேவை இல்லை உனக்கு

அவ்வப்போது வந்து
என் நீர்நிலைகளை கவனி
உன் உண்மை முகம்
உனக்கு தெரியக்கூடும்

இல்லை எனில்
உன் முகம் பார்த்து
நீ அதிரும் நாள்
விரைவில் வரக்கூடும் !




பேசும் இயற்கை : 007

புற்களுக்கு இடம்
கொடுக்கும் நான்
மலைகளுக்கும் பனிக்கும்
கொடுக்கிறேன்
சாதி மத இன
வரையறை
இங்கு இல்லை
புலியும் எலியும்
எனக்கு ஒன்றே
தகுதியானது வாழும்
அற்றது வீழும்
ஒரு சமநிலைக் கணக்கில்
எனக்குள் எல்லாம் சரியாகவே இருக்கிறது
என் பக்கங்களை கவனி
எல்லாம் அழகே என்பது
அங்கே மிளிரும்
சூரிய சந்திர
மழை வெய்யில்
தென்றல் சூறாவளி
அனைத்தும் ஒவ்வொரு பக்கம்
அடுத்தடுத்து நிகழும்
இது யதார்த்தம்
காட்சிகள் மூலம்
பாடம் கற்றுக்கொள் இல்லை எனில் நீ கற்க மறந்ததற்கு உன் அடுத்த
தலைமுறை
கப்பம் கட்டும்நினைவில் கொள்.




பேசும் இயற்கை : 008

இயந்திரமாய் எதையோ தேடி
ஓடும் வாழ்வில் இயந்திரத்துடன்
என் அழகை படம் பிடிக்க வந்த மனிதமே ..
நீ என் நிரந்தரக் காதலன்
இளமை பக்கங்கள்
வசீகர பனிப்புகை
அழகின் பசுமை
உன் கண்களுக்கு மட்டும்
எங்கே காணவில்லை
என்று நான் தேடும்
மனிதங்களில் நீ
தனி ஒருவன்
நீ எடுக்கும் நிழற்படங்கள்
எனக்கு போதை
நானும் உனக்கு
பிரச்சனை அற்ற போதை
ஒப்பனை அற்ற காலை முகம்
காதல் நிறைந்த மாலை மயக்கம்
எங்கிருந்தோ வருகிறாய்
ஏதேதோ செய்கிறாய்
உன்னால் அறிமுகமாகும்
உன் போன்ற மனிதர்களை
உடன் நட்பாக உச்சி முகர்ந்து ஏற்கிறேன்
உன் அடுத்த வரவுக்காக உள் நாக்கு எச்சிலுடன்
உறங்காமல் காத்திருக்கும் உன் நிழல் காதலி.
வா.





*பேசும் இயற்கை : 009*

*என்னை என் போக்கில் விடு*
*நான் வளர்வதில் இருக்கும்*
*உனக்கு தெரியா ஒழுங்கு*
*உனக்கு வாழ்நாள் பாதுகாப்பு*
*கரடுமுரடான என்*
*கிளைகள் படர*
*முயற்சிப்பது*
*உனக்கான குளிர்ச்சி*
*உன் கண்கள் விரும்பும்*
*நிறம் ஒன்று உண்டெனில்*
*இறப்பு வரை உடன் வரும்*
*நான் அணியும் பசுமை மட்டுமே*
*என் மர நட்புக்களை*
*வெட்டி எறிந்துவிட்டு*
*சூரிய கோபங்களுக்கு பயந்து*
*உன் அறையை குளிரூட்டும்*
*உன் புத்திசாலித்தனம்*
*முட்டாள்தனமே*
*எனக்கு கீழ் நில்*
*நான் வழங்கும் ஆக்ஸிஜன்*
*நான் எடுக்கும் கார்பன் டை ஆக்சைடு*
*புதிய உன்னை உனக்கு*
*தரமுடியும் என்னால்*
*என் காடுகளுக்குள்*
*அவ்வப்போது வந்து செல் உன் நுரையீரல் சுத்தத்திற்கு*
*நான் பொறுப்பு.*




பேசும் மனம் 010:

வான சுவற்றில்
மேக தொட்டிலில்
கிடைக்கும்சிறு நிலத்தில்
நீ கட்டிய வீடு உன் எதிர்காலம்
அங்கே உறங்குவதை
என் மடி உணர்கிறது
இரை தேடலில் நீ கவனம் கொள்
என் தாராள பூமியில் உன்
சிக்கன குடில் இரவு மட்டும்
உள்ளிருந்து பகல் முழுக்க
என்னுடன் இருப்பதால்
நீ என் நெருக்க உறவு
மழை மின்னல்
சூறாவளி புயல்
பற்றி கவலை வேண்டாம்
என் கணக்குகள் தப்பாது
உன்னை அனுப்புவது
என்று நான் முடிவெடுத்தால்
எடுத்தது தான்
நீ ஆயிரம் வீரர்
புடைசூழ நின்றாலும்
வெற்று வெளியில் நடந்தாலும்
எழுதப்பட்டிருக்கும் வரை
என் தொட்டில் உனக்கு பாதுகாப்பு
எனக்கு சரியான கணக்கு.




பேசும் இயற்கை : 011

வானம் ஒருநாளும்
கீழே வருவதில்லை
பூமி ஒருநாளும்
மேலே செல்வதில்லை
எல்லாம் அதனதன் இடத்தில்
பூமிக்கு மேல்
நான் அமைத்திருக்கும்
வெற்றுவெளி
காற்றுக்கும்
உன் விசாலப் பார்வைக்குமானது
நீர் நிலம் காற்று
நெருப்பு வான்வெளி
எதுவும் அதற்கான
சதவிகிதங்களில்
கூட குறைய வாய்ப்பேயில்லை
உனக்கும் இந்த
சதவிகிதம் பொருந்தும்
உன் எல்லையை நீ
கடந்தால் நானும்
என் எல்லையை
கடக்கவேண்டிவரும் எம் மனதால் விரும்பவில்லை
என்கிற போதும் !




பேசும் இயற்கை : 012

குளிரூட்டப்பட்ட உன்
கண்ணாடி அறையில் இருந்து
வெளியே வா என்கிற
அழைப்புகளே என்
மழைத்துளிகள்
பரந்த இயற்கையை
பார்க்காமல்
புள்ளி விபரங்களுடன்
பண சம்பாதிப்பு பார்க்கும் நீ
வெளியே வரும் நாள் வரும்
உன் அத்தனையும்
உனக்கு சலிக்கும்
என் அத்தனையும்
அப்போது
உனக்கு அங்குலம்
அங்குலமாக பிடிக்கும்
கண்ணாடி சுவர்களுக்கும்
காடுகளுக்கும் இடையில்
தூரம் குறைவு
காலாற நடந்தாலே கானகம் வசப்படும்.
வருகிறாயா ?




பேசும் இயற்கை : 013

என்னுடன் இயைந்து வாழும்
ஒவ்வொன்றின் நகர்வும்
ஆழ்நிலை தியானம் ..
இங்கு வகுப்புகள் தேவை இல்லை

தன் கால்கள் தண்ணீருக்குள்
தவழ நீச்சல் அடிக்கும்
தர்க்கமற்ற பறவை
தன்னசைவையும்
தண்ணீரசைவையையும்
தன் நிலை உணரும்
தருணங்கள்
எம் நீரில்
ஏற்படும் அசைவை
அமர்ந்து கவனித்தால்
உம் மனப் பிரச்சினைகளில்
போலிகள் மறையும்
நீர் மீண்டும் நீர் ஆவீர்
தயக்கமின்றி என்னருகில் வா
தள்ளாடாமல் தைரியமாக அமர்
தன்னை உணர் தம் திறன் பெற்று செல்
வாழ்வு உனக்கானது.




பேசும் இயற்கை : 014

உன் வாகன கண்ணாடி
என் தூறல் தூரிகையின்
வெண்மை சுவர்
இரவெல்லாம்
வாகனத்திற்குள்
இருக்கும் வெம்மைக்கு
வெளியில் நான் எழுதும்
பனிப்புகை கடிதம்
எழுதும் கடிதம்
ஏற்படுத்தும் உற்சாகத்தில்
வரைந்த ஓவியக்கோடுகள்
புரியா மொழி
வாய் திறக்கும் மௌனம்
கேட்கா பாடல்
தொடா அணைப்பு
அனைத்தும் தெரியும்
நீ
என் அலைவரிசையில்
பயணித்தால்
இல்லை எனில்
நீக்கும் இயந்திர உதவியுடன்
காணாமல் போகும் அத்துணையும்
ஆம் எனில் உன்னுடன்
பேசக்காத்திருக்கும்
என் ஈர இதழ்கள்
ஆம் என்று வா
ஆலங்கட்டி செல்ல அடிகள்
காத்திருக்கிருக்கிறது.




பேசும் இயற்கை : 015

சூரியனின் மறைவில்
உனக்கு ஒரு செய்தி ..
இன்றோடு இந்த நாள்
முடிகிறது.. இனி வர வாய்ப்பில்லை

செந்நிற வாழ்த்துக்களை
நான் சொல்வது
இரவு ஒரு சுதந்திர
அனுபவமாகட்டும் என்பதால்

மலை கடல்
பின்புறங்களில் நான்
ஒளிவது என் அருமையும்
உனக்கு புரியவைக்கவே

அதிகாலையில் மீண்டும்
உன்னை சந்திப்பேன்
ஒரு புது நாளில்
புது சிந்தனைகளுடன்

நேற்றைய மனிதனாய்
நீ இருந்தால்
நாளைய என்னை
உன்னால் பார்க்கவே முடியாது போகும் .. நான் சொல்வது
உனக்கு கேட்கிறதா ?




*பேசும் இயற்கை : 016*

*என் கரைகளை கவனி*
*எல்லாவற்றிக்கும்*
*இடம் கொடுத்து*
*எல்லைகள் மீறாமல்*
*எதார்த்த வாழ்க்கை*
*வாழ்பவை அவை*
*அந்த கரைகள்*
*அழுவதில்லை*
*ஆர்ப்பரிப்பதில்லை*
*அவைகளுக்கு தெரியும்*
*அவை இல்லை எனில்*
*அகிலம் இல்லை*
*கரைகளில் நடக்கும்போது*
*கதகதக்கும் பாதுகாப்பு*
*வாழ்நாள் முழுதும்*
*வழங்கப்படும் உனக்கு*
*கரைகளின் பலம்*
*நீருக்குள் தெரியும்*
*ஏன் எனில்*
*நீருக்குள்ளும் உன்னை*
*தொடர்பவை அவை*
*நீருக்குள் விழும்*
*ஒவ்வொருவனும்*
*தேடுவது கரையை மட்டுமே*
*கரையை அடைந்த உடன் வாங்கும் நிம்மதி மூச்சினில்*
*வாழ்கின்றன கரைகள்.*




பேசும் இயற்கை : 017

ஆங்காங்கே புள்ளிகளாய்
உன் செயற்கை திமிர்
என் இருப்பின் இயல்பை
அப்புள்ளிகள்
கெடுத்தபோதும்
பெரும் மனம் கொண்டு
மன்னிக்கிறேன்
என் அந்திம
வெளிச்சங்களில்
உன் செயற்கை காடுகள்
பளீரென மின்னுவதை
கடைசியாக எப்போது கவனித்தாய் ?
இருளுக்கு பயந்து
செயற்கை வெளிச்சத்தில்
வாழப் பழகும் மானிடா
இருளே நிலை என்பதை அறியடா
வண்ண வண்ணமாய்
வித விதமாய்
விளக்குகளின் கீழ் நகரும் நீ
என் வானவில்லை காணும்போது
ஒரு கணம் நிற்கிறாயே ...
அங்கு இருக்கிறது என்
வெற்றி யதார்த்தம் !
#இயற்கைஒளிவாழப்பழகு




பேசும் இயற்கை : 018

சாலைகளின் அருகில்
என் நீர்ப் போர்வைகள்
உனக்காக காத்திருக்கின்றன ..
பசுங்குளிரை இன்னும் உணரவில்லையா நீ ?
என் நீர்நிலைத் தெம்பினில்
முதுகெலும்பு நிமிர்த்தி
நிற்கும் மரங்களின் நீள் திமிர்
தெம்பு கொடுத்த நீரிலும் தெரியும்
ஓடிக்கொண்டே இருக்கும்
உன் தேடல் கால்கள்
கொஞ்சம் தளர்ந்து அமரட்டும்
நான் விரித்த நீர்வெளி கரையினில்
தியானமும் யோகமும்
மூடிய அறைகளுக்குள்
இருக்கிறதென்று உனக்கு
யார் சொன்னது ...
என் நீர்நிலையுடன் நட்பு கொள்
கொதிக்கும் நீ என்
நீர்நிலைக்கருகில் வா கொஞ்சம் குளிர்ந்து
பின் செல் ...
என் நீர் அணைப்பு
நீ செல்லுமிடம் எல்லாம்
உன்னுடன் தொடரும் !
#நீர்நிலைகுளிர்தலுணர்




பேசும் இயற்கை : 019

வார்த்தைகளில்
வடிவங்களை
வசியம் செய்ய
விரும்பும் கவிஞன் நீ
அங்குலத்தில் நூறில்
ஒரு பங்கு பார்த்து
நீ எழுதுபவை
என் கணக்கில் அடங்கா
குறுணி நிலத்திற்கு பொருந்தா
நீ என்னுள் இன்னும் வா
என் பச்சை பக்கங்களில் அயர்
என் நகரா நீர்நிலைகளில் மையம் கொள்
என் உண்மையில் நீ கனவு காண்
சாலைகள் தான் உன்னை
ஒரு வரம்பிற்க்குள் இயங்குகின்றன
சாலை அற்ற சாலையில்
நான் வாழ்வது உனக்கு தெரிகிறதா ?
என் இருப்பின் இதயம் அருகில்
நீ வரமுடியும் எனில்
என் கரும்பச்சை குளிர்ச்சி
உன்னை களவாடக்கூடும் பின் கலந்து ஆடவும் கூடும்
தேடி நித்தம் வா தையிரியமாய் தொலைந்து போ.
#கானகம்பழகு




*பேசும் இயற்கை : 20*

*உன் விஞ்ஞான அறிவு*
*நீ பெருமைப்பட அல்ல*
*என் அடிப்படைகளை காண*
*உனக்கும் எனக்குமான*
*வசதிப் பாலம் அது*
*சேறும் சகதியும் பூசி*
*வழுக்கும் சாலை வசதியற்ற*
*மண் சாலைகளில் பயணித்து*
*உன்னை*
*உள்ளும் புறமுமாய்*
*புதுப்பிக்கும் வாகனம்*
*அழுக்கு சேராமல்*
*வர்ண தோரணையாக*
*கட்டிடத்தில் இருந்து*
*கட்டிடத்திற்கு பயணிக்கும்*
*உன்*
*கௌரவம்*
*பறைசாற்றும் வாகனம்*
*எது உன் வாகனம்*
*என தெளிவு கொள்*
*உன் வரவிற்காக*
*நான் காத்திருப்பதே*
*உனக்கு கிடைத்த வெற்றி ...*
*பணம் சேர்க்கும் மனிதங்களுக்கு மத்தியில்*
*என் மனம் சேர்த்திருக்கிறாய்*

*நெஞ்சு நிமிர்த்தி*
*நடந்து செல்.*




பேசும் இயற்கை : 021

இங்கே வா
நடந்து வா
உன் போலி தோரனைகளை
எறிந்து நடந்து வாஉன் வாழ்வு
தொடங்கியதும் முடிவதும்
இங்கேதான் என்பதை
நினைவூட்டிக்கொள்ள வா உன் வயிற்றுக்கு
ரிஷிமூலம் நதிமூலம்
இங்கேதான் என
அறிய வா ஏதோ ஒரு
பெயர் தெரியா விவசாயி
தன் உன் வயிற்றுக்கு
உழைப்பதை கவனி
இன்னும் கொஞ்சம்
அதிகம் விலை கொடுக்க தோன்றும்
அவன் ஊட்டும் பயிர்களுக்குநெடுஞ்சாலைகள் அல்ல
உன் பிரச்சினைகள்
இதை மறந்து நெடுஞ்சாலையில்
பயணிக்கிறாயே ...
அதுவே உன் பிரச்சினை காலாற நடக்க வா
என் சகதிகளை பொறு
உன் சுவாசக்காற்றாய்
நான் நிரம்புகிறேன் எதிர்பார்க்கிறேன்.




*பேசும் இயற்கை : 022*

*என் நீர்நிலைகள்
நகரும்போது
கொடுத்த ஈகை
கரை மரங்கள்*

*என் நீர்நிலைகளின்
நேரிடை தொடர்பு
வேருடன் இருப்பதன்
கால அடையாளம்
மரக்குழந்தைகள்*

*என் வடிவம்
ஒன்றில் இருந்து
மற்றொன்றிற்கு
மாறுவது யதார்த்தம்
எனக்கு அழிவே இல்லை
நீர் வேர் மரம் பழம் விதை ...
நான் உடை உடுத்துவதில்லை
என் நிர்வாணம்
வேர்களை அடையும்போது
கிடைக்கும் ஒன்றை
ஆடை அணிந்த நீ
அழிப்பது ஏனோ ?
#நீர்நிலைகள்*




*பேசும் இயற்கை : 023*

*பூமியின் பக்கங்களில்
பொழியும் நான்
தெருக்களில் மட்டும்
உன்னை தேடுகிறேன்
ஒரு கருப்பு எதிர்ப்புடன்
என்னிலிருந்து விலகி
எதார்த்தம் தவிர்த்து
நீ மறைவது எனக்கு
விடையில்லா கேள்வி
ஆதாரம் நானே என்று
என்னை இன்னொரு
கிரகத்தில் தேடும் நீ
இங்கு மட்டும் ஏன்
என்னிலிருந்து விலகி ஓடுகிறாய் ?
உன் உச்சந்தலை குளிர
உன்னை நனைத்து
உன்னுடன் விளையாட
விண்ணில் இருந்து வரும்
நீர்ப்பாலம் நான் ...
வா விளையாடுவோம் !*



பேசும் இயற்கை : 024


என் மோக நிமிடங்கள்
உனக்கு புரியாதவை

சிறு புற்களுடன்
நான் ஆடும்
நீர் நடனங்கள்
சூரிய வருகைக்கு
முன் மட்டுமே

மொத்த புல்லின்
முதுகெலும்பையும்
மென் குளிர் நீரால்
வருடி வாழும் நான்

என் பிரிவிற்கு
நான் தெரிவிக்கும்
துளி எதிர்ப்பு
அந்த புல்லின் ஓரிடத்தில்
நீ காண்பது

என் மோக நிமிடங்கள்
உனக்கு புரியாதவை




பேசும் இயற்கை : 025

நிறுத்தி வைக்கப்பட்ட
நீர்த்திவலைகள்
உன் பார்வைக்காக ...
உன் தியானம் இங்கு
ஆரம்பம்
அந்த இலைகள்
வானம் பார்த்து
நிற்கவில்லை
உன் வரவிற்காக
நிற்கின்றன
காற்றின் அசைவில்
அந்த நீர்த்துளிகள்
அசையாமல் நான்
பாதுகாப்பது
உன் பார்வையின்
கலப்பிற்க்காக !
என் இலைகளின் முன் நின்று
சில நொடிகள்
அதன் நிலைத்தன்மையை
கவனி ...
அது சொல்லும் பாடங்கள்
உன் தியானத்தின் ஆரம்பப்புள்ளி !
ஒரு மழைக்காலத்தில்
நின்ற மழைக்கு பின்
நீயும் நானும் சந்திப்போம்
என்கிற நம்பிக்கையில் காத்திருக்கும் என்
நீர்த்திவலைகள் !




பேசும் இயற்கை : 026

வந்த மனிதங்களில்
என்னை உபயோகித்த
பலருக்கு மத்தியில்
என்னை ரசித்தன சில ...
என் எல்லைகளை
ஒரு செவ்வக எல்லைக்குள்
கொண்டு வர முடியாதெனினும்
கொண்டு வர முயற்சிக்கும் நீ
எனது சகா
உன் வாகன இறக்கைகள்
என்னிடம் வரும்போது
விரிவதும் ... நகரங்களில் சுருங்குவதும்
அழகு முரண்
இப்போதெல்லாம் நான்
மழையாக பெய்யும் போது
உன்னை காணாது தவிக்கிறேன்
விடை பெற்ற காதலனை
காண தவிப்பதுபோல்
வா ... வந்து என் இளமை பக்கங்களில்
இதமாய் நனை ...
இமைகளின் காட்சிகளை இங்கிதமாய் படம் பிடி...
வானம் பூமி என என் இரு வடிவங்கள்
இணையும் இடத்தில்உன் நிழல்பட கண்கள்
நிலைப்பது என் வெட்க வரம்.

உனக்காகவே நான் ஏற்படுத்தும் சந்கேதசங்கீத
அழைப்பே என் மழை !




பேசும் இயற்கை : 027

நீ அமைத்த சாலைகளில்
நீ பயணிக்கும்போது
நீ பார்க்க தவறும்
நான் உனக்காக
எங்கும் நிற்பதில்லை

என்னை கடக்க
பாலம் அமைத்த நீ
என்னுடன் பயணிக்க
மறந்தது ஏனோ ?

என் ஆற்றின் நகர்தலே
என் பாதைகள்
ஓரிடத்தில் ஆற்றை
நிறுத்தி இருந்தால்
நீ தடம் அற்று
அழிந்திருப்பாய்

என் நகர்தல் இயல்பு
என்று தெரிந்தும்
எப்படி உன்னால்
ஓரிடத்தில் வாழ முடிகிறது ?

நகர். உணர்.




பேசும் இயற்கை : 28


செயற்கை ஒளியில்
செயற்கை வரைப்படங்களுடன்
செயற்கை வாகனத்தில்
பயணிக்கும் உனக்கு

என் யதார்த்த வழிகள்
எப்போதும் புரிய வாய்ப்பில்லை
என்னுடன் பயணிக்க
ஒரு வழி செய் ...
புதியதோர் உலகம்
உன் கண் முன்னே

இருக்கும் என்
மரக்குழந்தைகளை
வெட்டி எரிந்து பாதை
அமைக்கும் நீ

செல்லும் வழியெல்லாம்
இருபுறமும் மரம்
வளர்க்கும் நான்
என் நோக்கங்கள்
உனக்கு புரிகிறதா ?

என்னை தொடர்
என்னில் இருந்து கற்றுக்கொள்.




பேசும் இயற்கை : 029

என் மழை பெய்தால்
உன் சாலைகள்
குழிகள் நிறைந்து
உன் நேர்மையை தெரிவிக்கும்

என் நீர் நெடுஞ்சாலைகள்
அதே மழையில்
மண் நனைத்து
மரம் வளர்த்து
மதிக்கு பசுமையை பரிசளித்து
மென் நகர்வில்
தன் வாழ்வை
தடம் நிறைந்து முடித்துக்கொள்ளும்

நீ என்னை கடக்கவே
முயற்சிக்கிறாய்
என்னுடன் பயணிக்க
அல்ல !

யோசித்து வழி மாற்று.




பேசும் இயற்கை : 030

அந்த காம்பிற்க்கு
ஒரு துளி நீரின்
எடை அளவு
தாங்க முடிந்த கனம்
மௌனக்காம்பிற்கும்
குளிர் துளிக்கும்
இடையே புவி ஈர்ப்பு விசை
எதிர்ப்புகள்.
நிற்கவா போகவா
எனக் கேட்கும் துளிக்கு
பதில் சொல்ல முடியா
ஊமைக் காம்பு
பிரிவது உறுதி எனத்
தெரிந்தும்
இறுதி வரை
காம்பை நேசிக்கும்
நீர்த்துளிகளின் எழுதா
முனகல்கள்
இதேயெல்லாம் கவனிக்க
உனக்கு நேரம் இருக்கிறதா
மனிதமே ?
இல்லை பணியே
பிறவித் தவம் என
வாழ் மடி வாழ்க்கையாய்
உன் இருப்பு நிறைவடைகிறதா ?
#சிறுஅசைவையும்கவனி




பேசும் இயற்கை : 031

உன் தெருக்கள்
என் மழை துடைப்பத்தால்
கழுவப்படுவது
உன் வரவுக்காக
ஒரு மழைக்குப்பின்
உன் தெருக்களை கவனி
ஈரம் சுத்தம் மௌனம்
ஆட்கள் அற்ற ஓவியம்
என் பறவைகள்
அங்கு அமரும்போது
உன் தெரு ஓவியத்தின்
சங்கீத கொஞ்சல்கள் தொடங்கும்
பச்சை வண்ண
நீர்க் கழுவல்கள்
தெரு ஓரங்களில் ...
கம்பீர நடையில்
உன் தெரு
மேடுகளையும் கடக்கிறது
#எங்கேவாழ்கிறாய்நீ




பேசும் இயற்கை : 032

நகரும் நீருக்கு நடுவில்
நகராமல் நிற்கும்
தீவுகள் சொல்லும்
பாடங்கள் உனக்கானவை

உலகின் ஓட்டங்கள்
எவ்வளவு வேகமாய்
பயணித்தாலும்
நிற்பவைகளும் இங்கே
வாழ்கின்றன...
நிலைக்கின்றன

தீவுகள் என்
தியான மண்டபம்
அது அதிர்வுகள்
அற்ற யோக நிலை
மெதுவாய் என்னை நோக்கி
மொத்தமாய் வா
அடையாளங்களை தொலைத்து
ஆர்ப்பாட்டம் அற்று வா
நிதானம் இங்கு
நிர்வாணமாய் காத்திருக்கிறது
நீ வந்த பின்
நின் ஆடையாக அது மாறும்
#நிதானத்தீவினைஅடை





பேசும் மனம் : 033

அஹிம்சை சார்ந்த
அமைதியை சுவாசித்து
மடியும் என் பூக்கள்
மறையா தடங்களால் கேட்பது
மனிதத்திற்கான கேள்வி
மகிழ்விலும் துக்கத்திலும்
மனதில் எழும்
மனம் சார் நறுமணங்களை
மறுப்பின்றி கொடுப்பவை என் பூக்கள்
வண்ணப் பூக்களில்
வாழ்க்கை அழகாவது
யாரோ ஒரு இளைஞனின்
சொல்ல முடியா உணர்வை
யாரோ ஒரு பெண்ணிடம்
என் பூக்கள் சொல்லும்போது
இரவில் மலரும் பூக்களை காலையில்
நீ கவனிக்க
நான் கொடுப்பதன்
நோக்கம் ஒன்றே ...
வாழ்க்கை மிக அழகானது
உடன் பூக்கும் உடன் மறையும்
இருக்கும் நாளில் வாழ்.





பேசும் இயற்கை : 034

என் உருவங்கள்
நீர்நிலையில் கலக்க
வெட்கப்படா..
வேடம் கொண்டது தானே
வெட்கப்படும்
யாருமற்ற ஏரியில்
என் நிழலுடன்
நான் நிற்பதை
தூர நின்று ரசிக்கும்
மௌன மேகங்கள்
நீர்நிலைகள்
பரவிக்கிடக்க
தள்ளி நிற்கும்
செங்கரைகள் ..
சிறு இடைவெளி நன்மையே
அங்கிங்கு எனா
விரிந்து நிற்கும்
என் இயற் உலகம்
உன் விருப்ப வரவால்
கிடைக்கும் நிழற்படத்தில்
நெஞ்சு குழி குளிர்ந்த
மென் மழையாய் ...
பெறும் அவ்வின்பம்
பெறட்டும் இவ்வையகமும்
#நகரவாழ்வில்இருந்துவெளியேவா



பேசும் இயற்கை : 035

தான் கொடுத்ததை
தானே பெறுவதை
நீ பார்த்ததுண்டா ?
கொடுத்த நீரும் பெற்ற மரமும்
ஒன்றை ஒன்று சந்திக்கும்
உலக அதிசயம்
என் கண் முன்னே !
கொடுப்பதும் பெறுவதும்
பண மதிப்பு
பண்ட மாற்றில்
நடப்பதில்லை எங்களிடம்
ஆதலால்
களவு பொய் புறம் பேசல் பொறாமை கோபம்
இல்லை எங்களிடம்
எங்களுக்கென்று
கணக்குகள் இல்லை
பிரச்சனைகளும் இல்லை
கொடுப்பதும்
பெறுவதும்
எங்களின் இயல்பு
எங்களுக்கு பின் வந்து கணக்கு போடும்
மானிடா ...எங்களின் மனக்கணக்கிற்கு
முன் உன் கணக்குகள் வீணடா ?
#கொடுத்தும்பெற்றும்வாழ்




பேசும் இயற்கை : 036

ஓவியங்களை
நீ வரைந்து விட்டு
திமிராய் நிற்கிறாய்
என் ஓவியங்களுடன்
உன்னை சிரித்த வண்ணம்
நான் கவனிக்கிறேன்
கொஞ்சம் வயல் கொஞ்சம் வானம்
கொஞ்சும் மேகம் கொஞ்சும் காற்று
இந்த ஓவியத்திற்கு விலை உண்டோ ?
ஒரு காட்சியில்
இத்துணை வண்ணங்களா ?
இயற்க்கை நடத்தும்
இந்த ஓவியப்பள்ளிக்கு
வரா மாணவர்களில் நீயும்
ஒருவனா ? ஒருத்தியா ?
வீடுகள் அற்ற
ஓர் உலகில்
ஆட்கள் அற்ற அநாதையாய்
நான் நிற்க நீ நகர்ந்து கொண்டே
இருக்கிறாய் ...
உன் பகுத்தறிவால்
எதையோ கண்டறிய !

#இயற்கைஓவியப்பள்ளியில்இணை




பேசும் இயற்கை : 037


வயல்கள் உன்
வருகைக்காக
காத்திருக்கின்றன ....

நீ வரும்போது
உன்னை வரவேற்க
தயாராகும் என் மேகப் போர்வை

நீல வானமும்
நெற்றி அதிசயக்கும்
நிர்வாண மலையும்

திகட்டா தென்றலும்
வெள்ளை பறவைகளும்
நடிக்க தெரியா மழையும்

உன்னை வரவேற்க
காத்திருக்கும் போது
பணம் சம்பாதிக்க
கிளம்பிய நீ
எந்த தடையமும் இன்றி
எங்கே தொலைந்தாய் ?





பேசும் இயற்கை : 038

உனக்கு தேவையான இடம்
உனக்காக காத்திருக்கும் போது
உன் நோக்கங்களை
உளம் செலுத்தி
உற்சாகமாய் வா ...

உன் இடத்தில்
இயற்க்கை சாமரத்துடன்
காத்திருக்கிறேன்

எழுந்து இங்கே வா !





பேசும் இயற்கை : 39

ஒரு நாள் கடவுள் ..
உலகின் ஒரே அழகு ..
தலையின் நிலா ..
தன்னடக்க சுவரொட்டி..

காற்றின் வரவேற்பறை ..
தென்றலின் தேடல் புள்ளி ..
காட்சியின் எல்லை வர்ணம் ..
காதலின் பேசும் மனசாட்சி ..

கவிஞனின் மன ஒத்தடம் ..
காதலியின் உருவகம் ..
விடிகாலையின் வெளிச்சம் ..
மாலையின் மௌன அழுகை ..

அத்தனையும்
போதவில்லை
அழகாய் உன்னை
வர்ணிக்க !




பேசும் இயற்கை : 40

ஐம்புலன்கள் போல்
ஐந்து பார்வைகள் ..
நீர் நிலம் நெருப்பு
ஆகாயம் காற்று என
ஒவ்வொரு நாளும்
கொடுக்கிறேன் ...
அளவே இல்லாத
என் வழங்கலில்
நீ அமைதியாய் வாழ்வது ஆனந்தமே !



பேசும் இயற்க்கை: 41


எங்களின் குழந்தைகள்
எங்களை மேயும் .
ஆனால் எங்களுக்கு வலிக்கா ..
எம் வேர்களை விட்டு விட்டு
எச்ச மிச்சத்தை உணவாக்கி கொள்ளும்

நியாயமான அந்தக் கணக்குக்கு முன்
நில வேரோடு எங்களை அழிக்க
நினைக்கும் உங்களை பார்க்கும்போது
நான் கொஞ்சம் பயப்படுவது
நிதர்சன உண்மையே !




பேசும் இயற்கை: 42

என்னை முழுமையாக காண
நீ ஏற்படுத்திய ஒரு
வாய்ப்பு உன்
தண்டவாளக் கனவுகள்
என்பதால் என்னை
கோடாய் கிழித்த போதும்
பொறுத்துக்கொண்டு உன்னை
வரவேற்க்கிறேன் ...
உன் பயணங்கள் ஆரம்பமாகட்டும் !



பேசும் இயற்கை : 43

என் உலகின்
இடப்பகிர்தல்
உன் கணினி மூளைக்கு
புலப்படா..

இங்கு வாழும் ஒவ்வொரு
உயிர்க்கும்
இடம் பொருள் ஏவலை
நான் கொடுத்திருக்கிறேன்

என் கணக்கில் நான்
பெருமை கொள்ளும் தருணம் இது !



பேசும் இயற்கை : 44

ஒவ்வொரு வளைவிற்கும்
ஒரு காரணம் உண்டு ..
நீல அகலங்கள்
இடைவெளிகள்
கோபுர உயரங்கள்
மனம் மயக்கும் வர்ணங்கள் ..

இவை எல்லாவற்றையும் நீ
ரசிக்க ஆரம்பிக்கையில்
நீயும் நானும்
ஒரு தொப்புள்கொடி உறவுகள் !



பேசும் இயற்கை : 45

உன் விளம்பரப்பலகை..
வெளிச்ச ஒளி
நகரும் வாகன வரிசை
கவிழ்ந்த குடை மனிதர்கள் ..

அத்தனையும்
கண்ணாடியில் விழுந்து
தெறிக்கும் என் மழை
துளிகளின்அழகிற்கு முன்

ஒன்றுமே இல்லை !



பேசும் இயற்கை : 46

என்னை சரியாய்
என் விகிதங்களில்
யதார்த்த புகைப்படம்
எடுப்பதால்

உன்னை வரவேற்க
உள் நெஞ்சில் காத்திருக்கிறேன்
உன் தொழில் முடித்து
உடன் வீடு திரும்பி வா !



பேசும் இயற்கை : 47

வர்ண ஓவியம் தீட்ட
பள்ளிக்கு செல்கிறாய் ..
என்னிடம் வா
என் எதிரில் அமர்

என் காட்சிகளை உன்
காந்த கருவிழியில்
அச்சு அசலாய் தருகிறேன் ...
ஓவியம் வரைய தேவையில்லை

ஒரு காட்சிப் பதிவில்
உன் கருவிழி மயங்கும் !



பேசும் இயற்கை: 48

உனக்காக இடம்
போட்டு வைத்திருக்கிறேன்
நிலம் என்பதை வேறு வடிவத்தில்
வா வந்து அமர்

போதி மரம்
நீருக்கு நடுவிலும் உண்டு ...
நீயும் புத்தனாகலாம்
நீ சொல்வதும் புத்தமாகலாம் !




பேசும் இயற்கை : 49

என் சூரியன்கள்
எழுவதோ விழுவதோ
எப்போதும் இல்லை

என் பூமியின் நகர்தலில்
என் சூரிய நகர்வு
இரவும் பகலுமாய்
வண்ணப் பூக்களாய்

கொஞ்சம் எழுந்து
காலை சூரிய மலர்வை
கவனித்து விடு
உள்ளப் பூக்கள்
ஒளிரட்டும்.




பேசும் இயற்கை : 50

நீ செல்லும்
வழியெங்கும்
நான் நீக்கம் அற
நிறைந்திருக்கிறேன் ..
நில் கவனி செல் !



பேசும் இயற்கை : 51

என் வண்ணங்களே
என் எண்ணங்கள்
புயலில் மாறும் நிறம்
இத மழையிலும் மாறும் ...
எண்ணங்களில்
நான் மகிழ்கிறேன்
வண்ணமற்ற நீரை
கொடுத்தது
என்னில் நான் முகம் காணவே !




பேசும் இயற்கை : 52

வாழ்நாள் முழுதும்
என் பக்கம் வராதவர்கள்
என்று ஒரு இனம் உண்டு ..

வாழ்நாள் முழுக்க
என்னை ரசிப்பவர்கள்
என்று ஒரு கூட்டம் உண்டு ..
அந்த கூட்டத்தில் நீ ஒருவன்
அடிக்கடி இங்கு நீ வருவதால்
உலகம் உன்னை முட்டாள்
என்று அறிவிக்க கூடும்
என்னை காணாமல்
தன்னை படித்துவிட்டதாய்
சொல்லும் அறிவு
மனிதர்களுக்கு மத்தியில் ...

நீ என் செல்ல குழந்தை !



பேசும் இயற்கை : 53

அங்குலம் அங்குலமாக
என்னை ரசிக்கிறாய்
உன் வாகன வரவில்
என்னை இழக்கும் நான்

உனக்கு கொடுக்க
எல்லாம் இருந்த போதும்
உன் வாகனத்தில்
பிம்ப நிழலாய் சில நொடி வாழ்வில்

நன்றி செலுத்துகிறேன் உனக்கு !



பேசும் இயற்கை : 54

உன் கட்டிடங்கள் உள்
நான் வர விரும்புவதில்லை..
வர முடியாது என்று அர்த்தமில்லை ...
இரண்டிற்கும் வித்தியாசம்
அங்குல அளவே ...
உன் கட்டிடங்கள்
ஜீவன்களுக்கு உயிர்
கொடுக்கும் பட்சத்தில்
உன் பாதுகாவலனும் நானே !
அவ்வப்போது நான்
அனுப்பும் மழை
உன் அறிவிற்கான ஓய்வு
உள் மன தழுவல்.
அமைதியாய் இரு
நான் எப்போதும் உன்னுடன்
துளி துளியாய் இருக்கிறேன்.




*பேசும் இயற்கை : 55*

*மனம் கொண்டு*
*என் அருகில் வா ...*
*இடம் வலம் எல்லாம்*
*இடம் தருகிறேன்*

*எதையோ நோக்கி*
*எங்கெங்கோ ஓடுவதை*
*எப்போது நிறுத்த போகிறாய் ?*
*என்னை காணாத உன் தேடல்*
*எக்காலத்திலும் நிறைவடையாது !*





பேசும் இயற்கை : 56

கிடைக்கும் சிறு
மறைவிடத்தில் நீ
சிலிர்த்து நின்றாலும்
என் மழையின் துளிகள்
உன்னை நனைக்கும் ..

உன் முதுகெலும்பு
குளிரும் வரை
என் மழையின் துளிகள்
உன் இதழ்களில் அமர்ந்திருப்பது
உன் அனுமதியுடன் என்பது ...


நம் உறவின்
முதிர்ச்சிக் குறியீடு !




பேசும் இயற்கை : 57

பறக்கும் மேகங்கள்
கொஞ்சம் நிதானித்து
அமரும் என்
மலைப்பகுதிகளுக்கு
எந்த வழியும் இல்லை ...

ஒரு வழி ஒன்றை
ஏற்படுத்தி என்னை நோக்கி வா
மேகம் அமரும் நேரத்தில்
என் மலையின் இடையில்
உனக்கோர் இடம் கொடுக்கிறேன் !





பேசும் மனம் : 58

உன் பொறுப்புகளின் முடிவில்
ஆரம்பிக்கும் என் உலகின்
காத்திருக்கும் என் காந்த மரங்கள்..

உன் பணிகள் முடியும்போது
தன் பணியை தொடங்க தயாராக
காத்திருக்கும் உன் வாகனம் ..

என் பசுமை இளமையை
அங்குலம் அங்குலமாக
உன் அழகு புகைப்படமாக்க
காத்திருக்கும் நான் ...

காத்திருத்தல் எவ்வளவு
அழகானது !?




*பேசும் மனம் : 59*

*என் பசுமை பக்கங்களை*
*மழை நீரில்*
*கழுவி காத்திருக்கிறேன்..*
*காலாற நடந்து வா ...*


*இருபுறமும் உன்னை*
*அணைக்க தவழும்*
*என் தென்றல் கைகள்*
*உன் கண்களில் தெரியும்*

*எல்லோருக்கும் இந்த*
*அழைப்பு இல்லை ..*
*என்னை நோக்கி நகரும்*
*உன்னை போன்ற சிலரின்*
*மனதிற்கு மட்டும் !*




*பேசும் இயற்கை 60 :*

*சாலையின் ஓரத்தில்*
*நீ வாகனம் நிறுத்தும்*
*நேரத்தில் ஆரம்பிக்கிறது*
*நீயும் நானும் மட்டுமே*
*சுற்றித் திரியும்*
*என் காதல் தேசம் !*




*பேசும் இயற்கை : 61*

*நான் நகர்வதில்லை*
*நீ நகர்கிறாய் ..*

*நான் செயற்கை அணிவதில்லை*
*நீ அணிகிறாய்*

*என் மிச்சம் உரம்*
*உன் மிச்சம் தீங்கு*

*எவ்வளவு முயற்சித்தாலும்*
*என்னை தோற்கடித்து*
*நீ உச்சம் அடைய வாய்ப்பில்லை !*



பேசும் இயற்கை: 62

ஒரு எல்லைக்குள்
வாழும் உன்
வெளிச்சப்புள்ளிகளை கவனி ..

என் எல்லையற்ற
வெளிச்சத்திற்கு முன்
அது ஒரு புள்ளி மட்டுமே ..

செயற்கை அறை
வெளிச்சத்தில்
முடிந்து விடாமல் வெளிவா ..

உலகம்
மிகப் பெரியது
மிக அழகானது
என
உனக்கு புரியும் !




*பேசும் இயற்க்கை : 63*

உன் வாகனம்
என்னை பொறுத்தவரை
இன்னுமொரு பறவை..
அதன் இறக்கைகள்
என் பக்கம் வரும்போது மட்டுமே
விரியும்..பறக்கும்..மலரும் !




பேசும் இயற்கை : 64

அந்த நம்பிக்கைக்கு
பிரதிபலிப்பும்
நம்பிக்கை கீற்றுகளே ...
அதற்கு அதுவே
ஒத்தடமாய் !





பேசும் இயற்கை : 65

இங்கே தொலைந்தவர்கள்
தேடப்படுவதில்லை ...
தானாக தங்களை
கண்டுபிடித்து
வெளிவரும் திறமை
அவர்களிடம் நான்
வழங்குவதால் !




பேசும் இயற்கை : 66

என் ஈரம்
உனக்கு புரிய
வரும்போது
நீயும் நானும்
வேறல்ல .. !




பேசும் இயற்கை : 67

என் அருகில் அமர்ந்து
அமைதியாய் சுவாசிக்கும்
ஒவ்வொரு நொடிப்பொழுதும்
நீ தியானத்தில் இருக்கிறாய் ...

உன் நகர
நான்கு சுவர் தியானம்
ஏட்டுச்சுரைக்காய் என்பது
இப்போது புரிகிறதா ?

என் மடிமீது சாய்ந்துகொள்
என் தென்றலுக்கு
உன் தலைமுடி கொடு ...
என் புற்கள் உன் தோல் உரசட்டும்

எங்கோ சத்தமிடும்
ஏதோ ஒரு பறவையின்
தொலைதூர என்
பிள்ளை தாலாட்டு
கேட்கிறதா உனக்கு ?




பேசும் இயற்கை : 68

நிலைத்திருக்கும்
மண்ணும் மரமும்
வாழ்கிறது
ஒரே நோக்கத்தில்...

உதவவேண்டும்
என்பதை தவிர
வேறு எதுவும் அறியா
ஆரம்ப புள்ளிகள் அவை ...

எவ்வளவு நீ
கெடுத்தாலும்
கொடுப்பதை மட்டுமே
இயல்பாக கொண்டு வாழும்

அவையே நிலைத்தன்மையின்
சான்றுகள்...
எப்போதும் !




*பேசும் இயற்கை : 069*


இந்த உலகின்
ஏதோ ஒரு
எண்ணிக்கையின்
ஒரு பங்கை
கண்டுவிட்டு
உலகம் தெரியும்
என்று வாழும் நீ ....

எனக்கு ஒரு
சிரிப்பு வரவழைக்கும்
மனிதம்.




*பேசும் இயற்கை : 070*

*நீ எதையும்*
*தேடாமல்*
*என்னிடம் வருவதால்*
*என்னை அடையும்*
*ஒவ்வொரு முறையும்*
*உனக்காக சில*
*பக்கங்களை*
*பாதுகாப்பாய்*
*சேமித்து வைக்கிறேன் !*




*பேசும் இயற்கை: 071*

*நீ தேக்கி கொள்வது*
*உனக்கு என் மேல்*
*உள்ள நம்பிக்கையின்மையால்...*

*நான் தேக்கங்கள் கொள்ளாதது*
*எனக்கு என் மேல்*
*உள்ள நம்பிக்கையினால்..*

*என் கணிதங்கள்*
*எப்போதும் தப்புவதில்லை*
*நீ என் இயக்கத்தை*
*தடுக்காத வரை !*




பேசும் இயற்கை: 072

என் இருவர்
எவ்வளவு அழகோ
அவ்வளவு அழகு
என் ஒற்றைகளும் ...

தனியாக
நிற்கும்
ஈர்க்கும்
கீதமிடும்
யாரையும் எதிர்பார்க்காது..

என் ஒற்றைகள்
உன்னிடம் பேசும்
உன்னிடம் மாற்றம் கொணரும்
உன்னுடன் வாராது !




பேசும் இயற்கை : 073

அதனதன் இடத்தில்
பொறுத்தியதும் நான் தான் ..
பொறுத்துவதற்கு அனுமதி
கொடுத்ததும் நான் தான் ...
நான் இன்றி ஒரு அணுவும்
அசையா !




பேசும் இயற்கை: 074

என் உலகம்
எல்லோருக்குமானது அல்ல ..
நீ வா ..
என் மீது நம்பிக்கை வைத்து
நம்பிக்கையுடன் நில்...

என் மேகங்கள்
நகர விலக
ஓர் உலகம் புது உலகம்
உன்னை நோக்கி வரும் ..

அங்கு வந்தவுடன்
உன் மூச்சுகாற்றின்
சத்தத்தில்
என்னை உணர்வாய்..

நான் அழைப்பது
உனக்கு கேட்கும்போது
நீ இங்கு வருவாய் !




*பேசும் இயற்கை : 075*

*என்னை தொட*
*என் உயரங்களுக்கு வா...*
*பார்த்து செல்பவர்களுக்கு*
*நான் வெறும் காட்சி...*
*அருகே வந்தவர்களுக்கு*
*நான் ஒரு சாட்சி ...*
*என் உயரங்களை அடைபவர்களுக்கு*
*நானே மனசாட்சி !*




பேசும் இயற்கை : 76

ஆம்.
அந்த பயணியைத்தான்
அநேக தேவையற்றவைகளால்
ஆழமாய் கைது செய்திருக்கிறாய் ...

உலகின்
உண்மையான அழகான அழகை
உளம் காணும் ரசிக்கும் வெளிக்கொணரும்
உற்சாக திறன் அவன் ஒருவனிடம் மட்டுமே ...

அவனை உன் கைது நாடகத்தின்
அரசில் இருந்து விடுதலை செய் ..
அவன் வெளிவரும் நேரம்
அதிரடியாய் நான் உனக்குள் வரும் நேரம் !





பேசும் இயற்கை : 077

மடக்கி வைக்கப்பட்ட
மக்கிப்போன இறக்கைகள்
மாசற்று பரவி இருக்கும் என்
மனம் தொட உதவா ....

உன் இறக்கைகளுக்கும்
உயிர் உண்டு
உன் பயண ஆசைகளுக்கும்
உயிர் உண்டு
கொடுக்கப்பட வேண்டியது சுதந்திரம்
உயில் அல்ல !

நான்கு சுவர்களுக்குள்
நலிந்து முடியவா உன் வாழ்க்கை ?
நாற்புறமும் பறக்கவே
உன் மூச்சு இயக்கம் !

இன்னும் எவ்வளவு நாள்
இப்படி நான் காத்திருக்க வேண்டும்
இதமான உன்னை சந்திக்க ?




பேசும் இயற்கை: 078

பேச முடியாமல்
அசைவற்று
என்னுடன் நிற்கும்
என் கற்கள்
பாவப்பட்டவை அல்ல


அவையும் என்னில் ஒரு பகுதி
என்பதால் ..
மீண்டும் மீண்டும் நனைக்கிறேன்..
என்னை பொறுத்தவரை
கற்களும் நீரும் மண்ணும்
ஒன்றே !




*பேசும் இயற்கை : 079*

*என் எல்லைகள்*
*பனி வெயில்*
*கடல் ஆறு*
*பாலைவனம் மலை*
*என்று பேசிக்கொண்டிருக்கும் ..*

*அந்த பேச்சை*
*காது கொடுத்து கேட்கும்*
*சகா நீ மட்டுமே ..*
*என்பதால் உனக்கு*
*என் காட்சி வரவேற்ப்பு*
*எப்போதும் உண்டு !*





பேசும் இயற்கை : 080

உன் நிழல்பட
ஓவியங்களை நான்
ஒய்யாரமாக ரசிப்பதுண்டு ...

என் வர்ணங்களை
ஏடு ஏடாய் ரசித்தவன் நீ
என்ற எதிர்பார்ப்பில்... ஒரு நிலைக்கு மேல்
ஒளிவற்ற பொறுமை உள்ள
ஒரு மனிதன் மட்டுமே காணமுடியும்
ஒரே காட்சியில் என் பல்வண்ண முகங்களை...

அதிலும் ஒரு சில
ஒளிவு மறைவு காட்சிகள்
உனக்கானவை
உனக்கு மட்டுமே !




*பேசும் இயற்கை : 081*

*ஓவியங்களை அலைகளால் வரைந்து*
*கரைகளில் நான்*
*கண் வைத்து காத்திருக்கிறேன்*
*மீண்டும் மீண்டும் ..*

*என் அலைகள்*
*எதிர்நீச்சலால் போடும் இரைச்சல்*
*உனக்கான அழைப்பே ..*


*உன்னை பார்த்தவுடன்*
*அமைதியாகும் நான்*
*மீண்டும் அலைகளை*
*என்னுள் இழுத்துக்கொள்கிறேன்..*

*சத்தமின்றி !*





*பேசும் இயற்கை : 082*

*என் உலகத்திற்குள்*
*என் இருப்பிற்கு மிக அருகில்*
*எனக்கும் உனக்குமாய்*
*ஓரே ஒரு இருக்கை வைத்திருக்கிறேன்*
*எப்போது வருவாய் நீ ?*
*எந்த இசையுமின்றி எந்த பூக்களுமின்றி*
*எந்த வார்த்தையுமின்றி*
*எனக்கான உன்னை*
*நான் தேர்ந்தெடுக்கிறேன்*
*ஓரே ஒரு சிறப்பு காட்சியின் மூலம் !*
*நீயும் நானும் அனுபவிக்க வேண்டிய*
*அழகான தருணங்கள்*
*என் அலைகள் மீண்டும் மீண்டும்*
*ஏற்படுத்தும் எண்ணிக்கைகள்*
*அவ்வளவு ஆசை இருக்கிறது*
*என்னை அழகாக்கும் உன் நிழல்பட நெஞ்சத்தின் மேல் ...*
*காத்திருக்க வைக்காமல்*
*நீ வந்து சேரும்போது கரை மேல் அலைகளாய்*
*நாணிக் கோணி நகர்கிறேன்*
*உன்மேல் மென்காதல்*
*வயப்படும் இயக்கமாக நான் !*




பேசும் இயற்கை : 083

இளந்தழுவல் தெரியுமா உனக்கு ?
உன் பாதங்களை
என் அலைகளில் சமர்ப்பித்து நில்
குறு குறு உணர்வு தெரியுமா உனக்கு ?
அலைகளின் பின்னோக்கு விசையில்
மணல் பாதங்களில் நகர்வதை கவனி
ஈர ஈர்ப்பு தெரியுமா உனக்கு ?
அலை சென்ற பின் மணல் மேல்
தெரியும் உன் பாத சுவடுகளை நோக்கு
என் மென்தழுவல்
உணக்கும் எனக்கும்
மட்டுமானது...
நம் கால்கள் அதை அறியும் !




பேசும் இயற்கை : 084

என் பக்கங்களை
ஏதோ ஒன்று என
நீங்கள் கடக்க முடியாது ..

படிக்க வேண்டியதில்லை
பார்த்தாலே பரவசம் இங்கே
அறிவுக்கும் அதற்கு மேலும் ..

காற்றின் அளவிற்க்கு
நகர்தலை கட்டிக்கொள்ளும்
காற்றாலை ஒரு
இயங்கும் எல்லை ..

இங்கே நீ வந்தால்
இதயம் பணிந்து
இங்கேயே தங்க வாய்ப்புண்டு
இதற்கும் சாட்சி நானே !




பேசும் இயற்கை : 085

அதோ தூரத்தில்
தெரிகின்றன உன்
நகரத்து புள்ளிகள் ..

அவ்வளவு பெருமையாக
நீ பேசும் நகரங்கள்
என் வீச்சிற்கு முன்
வெறும் வெளிச்ச பொம்மைகளாக

அறிவியல் எவ்வளவு
அழகாய் பேசினாலும்
செயற்கை என்னை
ஒருபோதும் வெல்லாது ..

வந்துவிடு இங்கே !
வாழ்ந்து விடு முழுமையாக !!




பேசும் இயற்கை : 086

மாலை வேளையில்
என் சூரியனை ஒளித்து
விளையாடும்போது ..
நிலத்தின் நீர்
கண்டுபிடித்து தரும்
விளையாட்டை

நீ இதுவரை பார்க்கவில்லை எனில்
வாழ்ந்து பயன் இல்லை
என என் வயல்கள்
உன்னிடம் ஓர் நாள் சொல்லும் !




பேசும் இயற்கை : 087

ஈர நிலம் சொல்லும்
கடந்த கால் தடங்களை ..
என் நிலங்கள் கொஞ்சம்
ஈரம் மிகுந்தவை ..

நீ மிதித்தபின்னும்
ஈரம் மறைந்தபின்னும்
கடந்த கால சுவடுகளை
மறக்காமல் வைத்திருக்கும்..

என்றாவது ஒரு நாள்
நீ திரும்ப வரும்போது
இந்த தடங்கள் சொல்லும்
நீ என்னுடன் வாழ்ந்த காலங்களை !




பேசும் இயற்கை : 088

என் ஈரத்தில் தெரியும்
உன் பிம்பம்
உன்னைவிட அழகு..

பிம்பங்களை நான்
வைத்துக்கொள்கிறேன்
அசல் உன்னிடம்
மகிழ்வாக இருக்கிறதா ?




பேசும் இயற்கை : 089

என்னை மிகவும்
நேசிக்கும்,
மீண்டும் மீண்டும்
என்னை அடையும்,
உன் ஜன்னலோரத்திலும்
நானே படர்வேன்..
உள்ளிருக்கும்
எந்நேரமும் நகரும்
உன்னை
உச்சந்தலை முதல் ரசிப்பதற்காக...

இது இயற்கையின் நியதி !




பேசும் இயற்கை : 090

நீர் நிலை சொல்லும்
என் மனநிலையை ..
நீர் ஓட்டம் சொல்லும்
என் இயக்கத்தை ..
நீர்ப்பெருக்கு சொல்லும்
என் கோபத்தை ..
அகம் என்னவோ
அதுவே புறமும்
எண்ணம் எழுதலே
எழுத்தில் எழல்...
அமைதியை நோக்கி
பயணிக்கும் அகம்
கொண்டு நீ என்னை தேடுவதால்
இந்த நீர் நிலையாய்
என்னை காண்கிறாய் !
உன் புறச் செயல்கள்
என்னை பாதிப்பதில்லை ...
என் அகம் என்னும்
அச்சாணியில்
நான் எப்போதும்
நிலைப்பதால் !!
வா .. உன் புறமும் என் அகமும்
இணையட்டும் !




பேசும் இயற்கை : 091

உன்னை இயக்கிய
உள்ளிருந்து சரி தவறு கற்பித்த
உயிரை அதன் அச்சில் நிறுத்திய
உற்சாகத்தை தேவைக்கு வழங்கிய
உணர்வுகளை கையாள கற்றுக்கொடுத்த ...

அத்துணையும்
எம் துணையுடன்
உனக்கு கிடைத்ததால்
நீ இயற்கை
நான் பெற்ற பிள்ளை
எப்போதும் !




பேசும் இயற்கை : 092

என் நிலம்
தன் போர்வையின்
நிறத்தை இயல்பை
மாற்றிக்கொள்ளும்போது
ரகசிய இடங்களில்
மறைவதில்லை
போர்வை விலக்கிய
போர்வை அணிந்த
தருணங்கள்
என்னைப்பொறுத்தவரை
ஒன்றே ...
நடிக்க தெரியாத நான்
ஒரே முகத்துடன்
பார்க்கும்போது
நீ மட்டும் தெரிகிறாய்
என் அகலப் பார்வையில்
உனக்கும் நடிக்க தெரியாததால் !




பேசும் இயற்கை : 093

ஒளி வேண்டும்
என்றால் ஏதோ செய்கிறாய்
பேச வேண்டும்
என்றால் ஏதோ செய்கிறாய்
உண்ண வேண்டும்
உடுக்க வேண்டும்
இருக்க வேண்டும்
என்றால் ஏதோ செய்கிறாய் ...
அவ்வளவும் செயற்கை
அத்தனை பெரிய அளவுகளில்
ஒன்று புரியவில்லை உனக்கு
உன் அத்தனை பெரியதும்
என் பூமியின் மீது
இருக்கிறதெனில்...
உன் செயற்கை உயரங்கள்
என் முன் ஒன்றுமே இல்லை !





பேசும் இயற்கை : 094

என் ரகசியங்கள்
எல்லோருக்குமானவை அல்ல...

யதார்த்த முகத்துடன்
என்னை நோக்கி வரும்
முகமூடி அற்ற மனிதர்களுக்கு
மட்டும் காண்பிக்கவே
அந்த ரகசியங்கள்

என்னை நெருங்கி வா
வராதவர்கள் காணா
ஓர் உலகம் காண்பிக்கிறேன்
அது நமக்கானது மட்டும் !




பேசும் இயற்கை : 095


என் வெண் பக்கங்களில்
நான் எழுதா கவிதைகள்
உனக்கு புரியுமாயின்
என் தோள்களில்
நீ சாயவேண்டிய
மென் தருணம் இது !




*பேசும் இயற்கை : 096*

என் இயல்புகள்
சாயங்கள் பூசாதவை ..
என் குணாதிசயங்கள்
கலப்படம் அற்றவை ..

அதே நிலையில்
நீ இருக்கும்போது
உன் கண்களுக்கு மட்டும்
நான் தெரிவேன் !




*பேசும் இயற்கை : 097*

*எங்கோ சென்று*
*தியானம் பழகும் நீ*
*என்னருகில்*
*வந்து முகம் பார்*

*எவ்வித அதிர்வுமின்றி*
*உன் முகம் பார்க்க*
*முடியும் எனில்*
*தியானம் உன்னுள்*
*ஆரம்பித்திருக்கிறது*

*உன் முகத்தின் பின்னே*
*முழு ஆகாயமும்*
*அதே நீரில்*
*அதிர்வின்றி தெரியும் !*




பேசும் இயற்கை : 098

நீரினில் முகம் பார்த்து
மேகங்களை எல்லைக்கும்
காடுகளை வர்ணத்திற்கும்
பிரதிபலிப்புகளை அழகிற்கும்
சேர்க்கிறேன்...

சாட்சியாய் நீ வர
சாளரம் விரித்து
சார்ந்து நிற்கிறேன்
என் மரங்களின் நிழலில்

நகர நரக வாழ்க்கையில்
இருந்து விடைபெற்ற
உன் ஆன்மா
எனக்கு மட்டுமே !




பேசும் இயற்கை : 99

மூன்று மடங்கு நான்
ஒரு மடங்கு நிலத்தில்
கண் நோக்கி காத்திருக்கும்
என் நம்பிக்கை புள்ளி நீ

என் அளவுகளை
கொஞ்சம் உயர்த்தினால்
நிலத்தினையும் என்னால்
முழுமையாய் ஆக்கிரமிக்க முடியும்

உன் போன்ற மனிதங்கள்
உள்ளவரை
நிலம் நிலமாகவே இருக்கும்
நானும் நானாகவே வாழ்வேன் !




*பேசும் இயற்கை : 100*

*என் மழை உன்னை*
*மீண்டும் மீண்டும்*
*அணைக்கும்போது ...*

*உன் எதிர்ப்புகள்*
*உடைவது உறுதி*
*நீ என் அணைப்பிற்குள் ...*

*வருவது மிக மிக உறுதி.*




பேசும் இயற்கை : 101

உனக்கு உதவக்
காத்திருக்கும் நான் ...
என்னில் பயணப்பட
காத்திருக்கும் நீ ...
இருவரும் இணைதல்
என்னவொரு அனுபவம் ... ?
கடும் அலைகளும்
கால மாற்றங்களும்
புயல் ஓவியமும்
சூறாவளி புள்ளிகளுக்கும்
மத்தியில் ...
இருவரும் இணைதல்
என்னவொரு அனுபவம் .. ?
என்ன பார்க்கிறாய் ?
உன் வாழ்கைக்கான
ஆரம்ப பாடம் நான்
நடத்துவது புரியவில்லையா ?



ஜெயசேகரன் ஜென்